புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திராவிட இயக்கவழி திருக்குறள்

ஆ. பழனியப்பன்,
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசுக் கலை கல்லூரி,
ஆத்தூர், சேலம் மாவட்டம்.

## முன்னுரை

சங்க காலத்தின் இறுதிப்பகுதி அரசுகள் தத்தம் இயல்பழிந்து சிதறுண்டுபோன காலகட்டமாக இருந்தது. சங்க மருவிய காலச் சமுதாயம் அற இலக்கியங்கள் சமண, பௌத்த சமயங்கள், அச்சமயக் காப்பியங்கள் தலையோங்கி நின்ற காலமாக இருந்துள்ளது. களப்பிரர் படையெடுப்பு மாற்றத்தையும் பண்பாட்டுச் சிதைவையும் ஏற்படுத்தியது. அச்சிதைந்துபோன சமுதாயத்தைச் சீரமைக்க கருதியே அற இலக்கியங்கள் தோன்றின. அவற்றில் பொதுமை நோக்குக் கொண்டு எழுந்த நூல் திருக்குறள் ஆகும். தமிழ் இலக்கியச் சமூகவியல் எல்லையற்ற பரப்பளவைக் கொண்டு விளங்குகின்றது. அது இலக்கியத்தின் புதிய கருத்து நிலைக்கான கோட்பாட்டை உருவாக்கி தந்துள்ளது. வள்ளுவர் அக்காலச் சூழலில் அனைத்துக் காலத்திற்கும் பொருந்துமாறு சமூகக் கோட்பாட்டினைத் தமது குறளில் உள்ளடக்கியமையை ஆய்ந்துரைப்பதாகத் திராவிட இயக்கவழி திருக்குறள் என்னும் தலைப்பிலமைந்த இக்கட்டுரை அமைந்துள்ளது.

“தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் கூட்டத்தில் பேசப்படும் பேச்சுக்களில், ஆரியப் பாதுகாப்பு நூல்களான கீதையும், பாரதமும், இராமாயணமும் எடுத்துக்காட்டு நூல்களாக விளங்கினவேயன்றி, திருக்குறள் முதலிய தமிழ் நூல்கள் இடம்பெறவில்லை. எங்கு பார்த்தாலும் இராமாயணச் சொற்பொழிவுகள், பாரதச் சொற்பொழிவுகள், புராணப் பேச்சுக்கள். திருக்குறட் பேச்சோ, சிலப்பதிகாரப் பேச்சோ இல்லை. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்கள் தமிழ் மக்கட்குத் தெரியாப் பொருள்களாயின. தொல்காப்பியம் என்ற ஒரு சிறந்த பழந்தமிழ் நூல் உண்டு என்பது தமிழர்க்கு அறவே தெரியாது” (புலவர் குழந்தை, ப.10, 1964) தமிழிலுல்ல பலவாறு தொன்மையான நூல்கள், தமிழ்ச்சமூக வரலாற்றில், ஒவ்வொரு காலச்சூழலிலும் இவ்வாறு எதிர்கொள்ளப்பட்டன.

தொல் ஆக்கங்கள் என்பவை பின்னர் உருவாகும் நீதிநெறி மரபுகள், சமய மரபுகள், சீர்திருத்த மரபுகள் ஆகியவை சார்ந்து வாசிக்கப்படுவது தவிர்க்க இயலாத ஒரு செயல்பாடு. இவ்வகையில் தொல்காப்பியம், செந்நெறி சார்ந்த பனுவல்கள், சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகியவை குறித்த உரையாடல்கள் நிகழ்ந்துள்ளன. திருக்குறள் தொடர்பான உரையாடல்கள்தான் மிகுதியாக நடைபெற்றதையும் காணமுடிகிறது.

## தனிமனித ஒழுக்கம்

மனிதன் ஒரு சமுதாய விலங்கு. அவன் சமூகத்தோடு சேர்ந்து வாழும் கட்டாயத்திற்கு உட்பட்டவன் ஆவான். வீடு, ஊர், நாடு என அவனது தொடர்பு சமூக நிறுவனங்களால் பிணைக்கப்பட்டுள்ளது. பண்டையத் தமிழ் இலக்கியங்களில் அறம் என்னும் சொல் ஒழுக்கம் என்ற பொருளில் பல இடங்களில் பயின்று வந்துள்ளமை ஒப்புநோக்கத்தக்கதாகும். சான்றாக கலித்தொகையில்,

”அறஞ்சாரான் மூப்பே போல்... ... ” (கலி. 38)

என்று பயின்று வந்துள்ளது. திருக்குறளில் முதற்பகுதியான அறத்துப்பாலில், இல்லற நெறிக்கண் வாழ்வார் போற்றி நெறிமுறைகளுள் ஒன்றாக ஒழுக்கமுடைமையை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'' (குறள்.131)

மேலும் உயர்ந்த குலம் என்பதே உயர்ந்த ஒழுக்கத்தினால்தான் ஒழுக்கத்தில் தாழ்ந்தால் குலத்திலும் தாழ்ந்தவனாகி விடுகிறான் என்று வள்ளுவர் நற்குடியின் பிறப்பைக் கூறுகிறார். இதனை,

''ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்'' (குறள்.133)

என்ற குறள் சுட்டுகிறது. நன்றியுணர்வு, பொறுமை, புறங்கூறாமை போன்ற தனிமனித நற்பண்புகளையும் ஒழுக்கம் என்றே வள்ளுவர் மொழிந்துள்ளார். ஒழுக்கமுடையவர் தவறியும் தீய வார்த்தைகளைப் பேசமாட்டார். பிறர்மீது சினம் கொள்ளமாட்டார் எனத் தனிமனித ஒழுக்கத்திற்கு மனிதனின் மேன்படுத்த வேண்டிய மற்றும் தவிர்க்க வேண்டிய குணங்களைப் பற்றியே வள்ளுவர் பேசுகிறார்.

மேலும் இத்தகைய ஒழுக்கமுடையார், ஒழுக்கம் தவறுதலால் வரும் துன்பத்தையும் பழியையும் உணர்ந்து ஒழுக்க நெறியில் நின்று தங்களைப் பாதுகாத்துக் கொள்பவர்களே மனத்திண்மை வாய்ந்த பெரியோர் ஆவார் என்பதை,

''ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து'' (குறள்.136)

என்ற குறள் வலியுறுத்துகிறது. இவ்வாறு வள்ளுவர் தனிமனிதன் தன் பண்பால் குடும்பம் மற்றும் சமூகத்தில் கடைபிடிக்க வேண்டிய விதிகளைக் கூறி, தனிமனித ஒழுக்கமே ஒரு சமூகத்தை உயர்த்தும் ஆற்றல் உடையது எனத் தெவித்துள்ளார்.

கல்வி

மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு முக்கியத் தூண்டுகோலாக விளங்குவது கல்வி ஆகும். கல் என்பதற்குக் கல்லுதல், தோண்டுதல் எனப் பொருள் கூறப்படுகிறது. புதியவற்றை அறிந்து கொள்ளுதல் என்றும் கூறுவர். பொதுவாகக் கல்வி ஒருவனின் மனதை, பண்பை ஒழுங்குப்படுத்துகிறது. அவ்வகையில் ஒருவருக்கொருவர் இயைந்து வாழக்கூடிய சமூகத்தில் கல்வி கற்றோன் மற்றும் கல்வி கற்காதவனின் நிலை எவ்வாறு அமையும் என்பதை வள்ளுவர் கூறியுள்ளார். கல்வியானது அறம், பொருள், இன்பம், வீடு, புகழ், உயிர் என அனைத்திற்கும் அடிப்படையாக அமைவதாகும். ஆகவே வள்ளுவர் மனிதன் தன்னைத்தானே உணர்ந்து கொள்ளவும், முழுமை பெறவும் உலகத்தை அறிந்து கொள்ளவும் கல்வி மிகவும் தேவை என மொழிந்துள்ளார். இத்தகைய மென்மையுடைய கல்வியினை வள்ளுவர், தெளிவாகக் குற்றமில்லாமல் முழுமையாகக் கற்கவேண்டும். கற்ற பின்னர் அதன்வழி நடக்க வேண்டும் எனக் கூறுகிறார் என்பதனை,

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'' (குறள். 391)

என்ற குறள் வழி அறியமுடிகிறது. மேலும் ஒருவர் ஒரு பிறவியில் கற்கும் கல்வியானது ஏழு பிறப்பிற்கும் உதவும் என்பதை,

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து'' (குறள்.398)

என்ற குறள் சுட்டுகிறது. இக்குறளில் வள்ளுவர் கல்வியின் சிறப்பைக் கூறும் வகையில் மனிதனின் பிறப்பு பற்றிய கோட்பாட்டையும் இணைத்து குறிப்பிட்டுள்ளார். மனிதன் செய்யும் நன்மையும், தீமையும் அவனுக்கு தகுந்த விளைவைக் கொடுக்கும் என வலியுறுத்துகிறார்.

குடும்பம்

குடும்பம் என்பது கணவன், மனைவி, குழந்தைகள் என முப்பரிமாணங்களைக் கொண்டதாகும். ''வள்ளுவர் தமது அறநெறி சார்ந்த ஒழுக்கப்பார்வை வழி மனிதனைக் குடும்பத்தினர் ஒரு உறுப்பினராகவும், அரசின் அங்கமாகவும் காட்டுகிறார்'' என்பார் தெ.பொ.மீ.

''ஒரு சமுதாயத்தில் தனிமனிதர்கள் அணுக்களைப் போன்றவர்கள். தனித்து நின்று செயல்படக் கூடியவர்கள். ஒரு சமுதாயத்தின் மூலக்கூறு குடும்பம்'' என்கிறார் வா.செ.குழந்தைசாமி. குடும்பம் சமுதாயத்தின் ஒரு கூறு எனலாம். நல்ல குடும்பத்திற்கு அடிப்படையாக அமைவது அன்பும் பண்பும் ஆகும். இதனை வள்ளுவர்,

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'' (குறள்.45)

எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் வள்ளுவர் இல்வாழ்க்கை வாழ்பவனுக்குச் சிறப்பிடம் தருகிறார். கருணை பிறர் பொருள் விரும்பாமை, போன்ற பண்புகளோடு இல்லறம் நடத்துபவன் பிறர் அடையும் வெற்றியைவிட மிகுதியாகப் பெறுவான். எனச் சமூக தளத்தில் இல்லறத்தான் பெற்றுள்ள முக்கிய இடத்தைச் சுட்டியுள்ளார்.

மனைவியானவள் கணவனுக்குத் தோழியாகவும், குருவாகவும் விளங்கவேண்டும். அதைப்போல் கணவன் மனைவிக்குத் தூய அன்பினை வழங்குபவளாக இருத்தல் வேண்டும். எப்பொழுதும் கணவன் மனைவியோடு கொண்டிருக்கும் உறவானது கூட்டிற்கும், பறவைக்கும் உள்ள தொடர்பைப் போன்றதாகும். சமூகத்தில் ஆண் என்பவன் பரத்தையிடம் செல்லும் பழக்கம் இருந்ததை வள்ளுவர் கடுமையாகச் சாடுகிறார். மேலும் திருமணம் ஆன பெண்கள் தங்கள் கணவனையே தெய்வமாகத் தொழுது பயபக்தியுடன் வாழ்ந்தனர் என்பதை வலியுறுத்தும் விதமாக,

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'' (குறள்.55)

என்ற குறள் அமைந்துள்ளது. கணவன் மனைவி இருவருக்கிடையே நிலவும் உறவு இவ்வாறு விளங்க தந்தை, தாய், மகன் இவர்களுக்கிடையே நிலவும் உறவானது குடும்பத்தின் மிகுந்த வலிமையைப் புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது. சமூகத்தில் குழந்தைப்பேறு என்பது இன்றியமையாததாக விளங்கியது. அதிலும் தனிச்சொத்துடைமையின் அடித்தளத்தில் அமைந்த சமூகத்தில் ஆண் குழந்தை (ஆண்மகன்) முதன்மை இடம் பெறுகிறது. தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவு நிலையைக் கூறும்போது,

''தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்திருப்பச் செயல்'' (குறள்.67)

என்றும், தாய் மகன் மீது கொண்டிருக்கும் அன்பு மற்றும் பெருமிதம் பற்றிக் கூறும்போது,

''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்'' (குறள்.69)

என்றும் வள்ளுவர் மொழிந்துள்ளார். இவ்வாறு குடும்பத்தில் கணவன், மனைவி, குழந்தை எனப் பொதுவாய் அமையும் உறவுநிலைகளைக் கூறி, அக்குடும்பத்தின் உயர்வே நாட்டின் உயர்வுக்கு முதல்படியாய் அமையும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல்

வள்ளுவர் அரசு ஆளும் மன்னனை இறைவனாகப் போற்றுகிறார். மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் மக்களைக் காக்கும் பொறுப்பு மன்னனைச் சாரும். படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறும் அரசனுக்குப் பாதுகாப்பதாகும். அரசனின் வலிமை கருதி வள்ளுவர் அரசனை ஆண் சிங்கத்தோடு ஒப்பிடுகிறார். இதன்மூலம் அன்றைய அரசியல் அமைப்பைப் பதிவு செய்துள்ளார்.

அரசனின் அறிவுக்கூர்மை, போர்திறம், அமைச்சன் சொல்வன்மை, அரசனைச் சார்ந்திருப்போர் நிலை, அரசு நிலைச் சார்ந்த தொழில்கள், பகைவர், பகையை வெல்லும் உத்திமுறை, மன்னனின் நீதி தவறா நிலைமை, செயல்திறன், ஊக்கமுடைமை அவை பற்றிய செய்திகள், அவைக்களத்து உள்ளோர் தூது அனுப்பும் முறை, நாட்டைக் காத்தல், விழிப்புணர்வு, ஒற்றாய்தல், காலம் அறிந்து போர் தொடுத்தல் என முழுமையான அரசியல் மற்றும் அரசியல் பின்னணியைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். நாடாளும் மன்னன் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை,

''வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்'' (குறள்.471)

என்று குறள் காட்டுகிறது. மேற்கூறிய அரசியல் செய்திகளின் வழி ஒரு நாட்டிற்கும் மக்களின் நல்வாழ்விற்கும் அடிப்படையாக அமைவது அரசியல் ஆகும் என்பது பெறப்படுகிறது.

அறம்

மனிதனிடத்து அன்பு, பண்பு மற்றும் அமைதியை வளர்ப்பது அறம் ஆகும். கல்வி கேள்விச் செல்வங்களைப் பற்றிக் கூறும் வள்ளுவர் மனிதன் தன் வாழ்நாளில் அறமாகிய செல்வத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று கூறுவதனை,

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினும் ஊஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு" (குறள்.31)

என்ற குறள் உணர்த்துகிறது. இவ்வழி அறத்தின்படி வாழும் வாழ்க்கையே மனிதனை நல்லுலக வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் என்பதாம். மேலும் மனிதன் சமூகத்தில் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை ஒரு மனிதனின் பண்புகளோடு இணைத்து பேசியுள்ளார். ஊழ் பற்றிய நம்பிக்கை நட்பு, அகம் சார்ந்த ஒழுக்கம் என அறத்தின் வழி அமைய வேண்டிய சமூக அமைப்பை வள்ளுவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

பண்பாடு

அறிவு, பண்பு மற்றும் எண்ணம் ஆகியவற்றைச் முறையில் திருத்தமுற அமைக்க உதவுவது பண்பாடு ஆகும். மனிதனின் உளப்பாங்கு, நடைமுறைச் செயல் போன்றவை இதனுள் அடங்கும். இதனைக் கீழ்க்கண்ட குறள்கள் விளக்கும்.

"மனத்துகண் மாசிலன் ஆதல் அனைத்திறன்
ஆகுல நீர பிற" (குறள்.34)
"வறியார்க் கொன்றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள்.221)
"அகனமார்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்" (குறள்.92)

இவ்வாறு தனிமனித கோட்பாடு, கடமை, இன்சொல் கூறல் என நல்ஒழுக்கம் அமைந்த நல்ல சமூகத்தை வள்ளுவர் உருவாக்க விளங்கியமை புலப்படுகிறது. இதனோடு மிகுந்த அன்போடும் பெருமிதத்தோடும் உவகையோடு பேசப்படுவது விருந்தோம்பல் பண்பாடாகும். இவ்விருந்தோம்பல் பண்பு சங்க இலக்கியங்களில் அரசன், மக்கள் இருவருக்கும் கூறப்பெற்றுள்ளது. குறிப்பாக வள்ளுவர் இவ்விருந்தோம்பலை இல்லறத்தானுக்கு வலியுறுத்துவதை,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள்.81)

என்ற குறள் சுட்டுகிறது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் காப்பியங்கள் அனைத்திலும் திருக்குறள் வரிகள் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம். காப்பியங்களையும் திருக்குறளையும் ஒப்பிட்டுப் பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்த அதேவேளையில், நேரடியான திருக்குறள் ஆட்சி குறித்தும் பல்வேறு தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எழுதிய 'மனுநெறித் திருநூல்' மற்றும் இராமலிங்க அடிகள் எழுதிய 'மனுமுறை கண்ட வாசகம்' ஆகிய ஆக்கங்களில் திருக்குறளின் தாக்கம் இருப்பதைக் காண்கிறோம். குறள் வெண்பா வடிவத்தில் எழுதிய தண்டபாணி சுவாமிகள், திருக்குறள் கருத்துக்களைத் தன் கருத்து வடிவமாக வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

"புறங்கூறல் கேட்டுவப்பார் போய்த்தமக்கும் அந்தத்
திறங்கூறல் ஓராச்சிலர்" (மனுநெறி.15:5)
"அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது." (குறள்.181)

இவ்வகையில் இருபதாம் நூற்றாண்டில், திருக்குறள் வாசிப்பு சமூக இயங்கு தளத்தில் புதிய பரிமாணத்தோடு செயல்படத் தொடங்கியது.

முடிவுரை

வள்ளுவர் எழுதிய திருக்குறள் ஒரு நீதிநூல் மட்டும் அன்று. அது சமூகத்தை நல்ல முறையில் வடிவமைக்கும் கட்டமைப்பு நூல் ஆகும். உலக வாழ்க்கையில் மனிதனும் மனிதன் வாழும் சமூகமும் எவ்வாறு செயல்பட்டால் நன்மை விளையும் மகிழ்வு ஏற்படும் என நன்கு அறிய உலகளாவிய பொதுமைக் கோட்பாட்டை வள்ளுவர் வகுத்தார் என்பது புலப்படுகிறது. காலனிய வருகை, பல்வேறு புதிய விளைவுகளுக்கு மூலகாரணமாக அமைந்தது. சாதி, தேசிய இனம், மொழி ஆகிய பிற பண்பாட்டுக்கூறுகள் தொடர்பான புதிய உரையாடல்களைக் காலனியம் உருவாக்கித் தந்தது. மொழி சார்ந்த தனித்தமிழ் இயக்கம், கலை சார்ந்த தமிழிசை இயக்கம், சமூக சீர்திருத்தம் மற்றும் விடுதலை சார்ந்த சுயமரியாதை இயக்கம், அரசியல் அதிகாரம் சார்ந்த நீதிக்கட்சி, மொழி ஆதிக்கத்திற்கு எதிரான இந்தி மற்றும் சமசுகிருத ஆதிக்க எதிர்ப்பு இயக்கம், தேசிய இன விடுதலை சார்ந்த தமிழ் தேசிய இயக்கம், சைவ மறுமலர்ச்சி இயக்கம் எனப் பல பரிமாணங்களில் திராவிட இயக்க மரபு செயல்பட்டது.

துணைநின்ற நூல்கள்


1. அசக்கரவர்த்தி நயினார் (மூலம்), திருக்குறள் வழங்கும் செய்தி, தமிழாக்கம்: பகவதி ஜெய ராமன், பாரி நிலையம், சென்னை, 1959.
2. அமரிய அலெக்சாந்தர் இருதயராசு, திருக்குறளும் மனுநெறித் திருநூலும், திபார்க்கர்., சென்னை, 2004.
3. அருணாசலம் மு., தமிழ் இலக்கிய வரலாறு, பதிமூன்றாம் நூற்றாண்டு, திருத்தப்பட்ட பதிப்பு, தி பார்க்கர் சென்னை, 2005.
4. நாமக்கல் கவிஞர், திருவள்ளுவர் திடுக்கிடுவார், இன்ப நிலையம், சென்னை,1963.
5. புலவர் குழந்தை, திருக்குறளும் பரிமேலழகரும், இளங்கோ புத்தகசாலை, புத்தக வியாபாரிகள், ஈரோடு, 1964.
6. பிரகாஷ் வெ., திருக்குறள் பன்முக வாசிப்பு பதிப்பு, மாற்று, சென்னை, 2009.


********* ********* ********** ********* ********* ********** ********** **********